**செய்தி வெளியீடு எண்: 049** **நாள் : 29.01.2015**

**<u>மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழித்திட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைத் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி தகவல்</u>**

*******

மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (29.01.2015) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் செயல்பாடுகள் குறித்தும் டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழித்திட எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

தொற்று நோய்கள் பரவுவதை முற்றிலும் தடுக்க மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் கடந்த 14.1.2015 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறையின் முதன்மை செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், நகராட்சி இயக்குநர், பேரூராட்சி இயக்குநர், அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல இயக்குநர்கள், ஊரகவளர்ச்சித்துறை அலுவலர்கள் ஆகிய அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களை முற்றிலுமாக ஒழித்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை/ஊரக வளர்ச்சித்துறை/மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாநகராட்சி ஆணையர், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவத்துறை அலுவலர்களுடன் கடந்த 27.1.2015 அன்று திருநெல்வேலியில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேலும் மாண்புமிகு அமைச்சர்களால்

ராஜபாளையம் மற்றும் சங்கரன்கோயில் பகுதிகளில் நேரில் சென்று கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழித்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சி துறை மற்றும் மருத்துவத்துறையின் சார்பில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு, நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு உள்ளது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள்/நகராட்சிகள்/பேரூராட்சிகள் மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள அனைத்து இடங்களிலும் சிறப்பு கவனம் செலுத்தி துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். கொசுக்களை கட்டுப்படுத்திட அனைத்து பகுதிகளிலும் கொசு ஒழிப்பு புகை மருந்துகளை அடித்தல் (Fogging) நீர்நிலைகளில் கொசுப்புழு உற்பத்தியினை தடுக்கும் (Anti larval Breeding) மருந்துகளை தெளித்தல், குப்பை மற்றும் கழிவுகளை எங்கும் தேங்காமல் உடனுக்குடன் அப்புறப்படுத்தல், எங்கும் தண்ணீர் தேங்காமல், கொசு உற்பத்திக்கு உகந்த சூழ்நிலை ஏற்படாமல் விரைவு நடவடிக்கை எடுத்தல், நகராட்சியால் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் குளோரின் அளவினை உரிய கால இடைவெளியில் சோதனை செய்தல் என தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரகவளர்ச்சி துறையால் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தில் உள்ளஅமைப்புக்களின் உறுப்பினர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள், கிராம வறுமை ஒழிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலத் தொண்டர்கள் ஆகியோரை டெங்கு ஒழிப்புப் பணியில் முழுமையாக ஈடுபடுத்தி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக கைபிரதிகள் வழங்குதல், ஊர்வலம், தகவல் கல்வி மற்றும் தொடர்பு ஆகிய முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்து டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களையும் விழிப்புணர்வுப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும் இப்பணியில் அணைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து அவர்களது ஒத்துழைப்புடன் இப்பணியினை சிறப்பாக செய்ய அறிவுரை வழங்கப்பட்டது.

டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் மேற்படி நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் தீவிரமாக நடைபெற ஏதுவாக சிறப்பு குழுக்கள் அமைத்து சுகாதார துறை அலுவலர்களுடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் **3200** குழுக்கள் அமைக்கப்பட்டு **3520** பேர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இதே போல் **528** பேரூராட்சி பகுதிகளில் பொது சுகாதார பணியாளர்கள் **6154** பேரும் தினகூலி அடிட்டபபடையில் **3279** பேரும் சுயஉதவி குழு உறுப்பினர்கள் **6153** பேரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் நகராட்சி பகுதிகளில் **4380** குழுக்கள் அமைக்கப்பட்டு **30,665** பேரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

டெங்கு காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகளில் சென்னை மாநகரட்சியில் **384** கைதெளிப்பான்களும் வாகனத்தில் பொருத்தப்பட்ட தெளிப்பான்கள் **42**ம், நகராட்சிகளில் கொசு ஒழிப்பு கைத்தெளிப்பான்கள் **792–**ம் மாநகராட்சிகளில் **(**சென்னை நீங்கலாக**) 348–**ம் அதேபோல் வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு தெளிப்பான்கள் நகராட்சிகளை பொருத்தமட்டில் **175** எண்ணிக்கையும் மாநகராட்சிகளை பொருத்தவரையில் **60** எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் ஊராட்சி பகுதிகளில் **1646** புகை தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், குடியிருப்பு லார்வா உற்பத்தி தடுப்புநர்களாக நகராட்சி பகுதிகளுக்கு **3648** நபர்களும் மாநகராட்சி பகுதிகளுக்கு **(**சென்னை நீங்கலாக**) 1763** நபர்களும் கூடுதலாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டுகளை காட்டிலும் தற்போது மிகக் குறைவான நபர்களே டெங்கு காய்ச்சலில் பாதிக்கப்பட்டிருந்தாலும், டெங்கு நோயினை முற்றிலும் ஒழித்திட இப்போர்க்கால நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வு கூட்ட முடிவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமையில் டெங்கு கொசு ஒழிப்பு உறுதி மொழி அனைவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர் திரு.க.பணீந்திர ரெட்டி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய நிர்வாக இயக்குநர் திரு விஜயராஜ் குமார்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு க.பாஸ்கரன்,இ.ஆ.ப., மகளிர் மேம்பாட்டுத்திட்ட நிர்வாக இயக்குநர் திருமதி அமுதவல்லி, இ.ஆ.ப.,, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர், திரு,என்.சந்தீப் இ,ஆ,ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு ஆனந்த், இ.ஆ.ப., உட்பட அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் ஊரகவளர்ச்சி துறை திட்ட இயக்குநர்கள், பேரூராட்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

– – – – –

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**